## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2016

---

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரசாங்க விவசாய கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் மற்றும் 2017 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்ட விடயங்களுக்கு செம்மையாக்கல்கள் செய்யப்படுமாயிருந்தால் தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பல அடிப்படை அம்சங்களுக்கு பொருண்மையான தாக்கங்கள் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 12 ஆம் இலக்க பந்திக்கு இணக்கமற்ற வகையில் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது வாகனங்கள் மற்றும் கட்டிடங்களைத் திருத்தம் செய்தலும் பராமரித்தலுக்குமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,109,964 செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39**

நியமத்தின் 46 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான வைப்புக்கள் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 7,431,000 தொகையான நிலையான வைப்புக்கள் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீகரீதியாகக் காணப்படாத தேயிலை மற்றும் ஏனைய நாற்று மேடைகளின் பெறுமதியான ரூபா 4,364,171 தொகை இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் இறுதி இருப்புக்களின் பெறுமதி மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையான காணிகளில் நடுகை செய்ய முடியாத ரூபா 1,641,197 தொகையான தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய நாற்று மேடைகள் மற்றும் 2013 ஆம் ஆண்டில் தீப்பிடித்தனால் அழிவுற்ற ரூபா 1,858,500 பெறுமதியான தேயிலை இருப்புக்கள் மீளாய்வாண்டிற்கான இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அப் பெறமதியால் இறுதி இருப்பின் பெறுமதி அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 900,000 குத்தகையை வருமானமாகக் கணக்கீடு செய்தவற்குப் பதிலாக பிற்போட்ட சொத்துக் கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானமும் பிற்போட்ட சொத்துக்களின் கிரயமும் அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட எனினும், நிலையான வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 1,000,000 தொகை மீளாய்வாண்டின் போது மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், அப்பெறுமதியை செலவு வைக்க வேண்டிய கணக்குகளை சரியாக இனங்காணாது மீளாய்வாண்டின் போது கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி அப் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்த நடை பெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் கீழ் காணப்பட்ட தேயிலை நாற்று மேடைகள் மற்றும் கட்டிடங்களைத் திருத்தம் செய்தல் செலவு ரூபா 1,353,083 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட்டதன் காரணமாக முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சலானது அப் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 52,306,107 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக அப் பெறுமதியால் முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான ரூபா 8,233,725 மேலதிகப் பற்று வட்டி செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய பணிக்கொடைகளின் பெறுமதியை கணக்கீடு செய்யும் போது பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு ரூபா 48,497,486 வரவு வைத்து செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கணக்கிற்கு ரூபா 31,868,678 மாத்திரம் செலவு வைத்ததன் காரணமாக செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கணக்கின் மீதி ரூபா 16,628,808 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 96,041,073 ஆக இருந்ததுடன் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 119,362,386 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 23,321,313 விளக்கமளிக்கப்படாத வித்தியாசமாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் வணிக மற்றும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,229,794,553 ஆக இருந்தும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,239,804,480 ஆகக் காட்டப்பட்டிருந்தன் காரணமாக ரூபா 10,009,927 வித்தியாசம் காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றினை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) உயிர் வாழ் சொத்துக்கள் | 3,452,008,706 | மரங்களின் மதிப்பீட்டு அறிக்கை |
| (ஆ) பெற வேண்டிய குத்தகை வருமானம் | 15,780,848 | குத்தகை உடன்படிக்கை மற்றும் நிலுவை குத்தகைகளின் காலப் பகுப்பாய்வு |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 150,916,820 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 222,236,596 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 71,319,776 ஆல் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனைக் கிரயம் ரூபா 67,788,918 ஆல் குறைவடைதல் மேற்கூறிய நட்டம் குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் மிகை ரூபா 1,464,302,758 ஆக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது அது ரூபா 233,346,559 வரை குறைவடைந்திருந்தது. 2014 மற்றும் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மிகையில் சிறிய முன்னேற்றங்கள் இடம் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டில் மிகை ரூபா 256,171,541ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வை மீண்டும் செம்மையாக்கிய போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 11,464,302,758 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 256,171,541 வரை குறைவடைந்திருந்தது.